*Kalanjiyam International Journal of Tamil Studies* ISSN: 2456-5148 (Online)
*An international, peer-reviewed quarterly academic research journal* www.ngmtamil.in

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts10sp02.2026

**Vol. 10 No. 02, September 2026 (Special Issue) p30-34** | Available online at: www.ngmtamil.in
Original Research Paper – Peer Reviewed

# காப்பியங்களில் பழக்க வழக்கங்களும், நம்பிக்கை மரபுகளும்

## Customs, Practices, and Belief Traditions in Epics

**திருமதி அ.ரூபாதேவி,**

உதவிப் பேராசிரியர், ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி(தன்னாட்சி), சிவகாசி.

Email: rubadevi.a@gmail.com, Tel: 9790144858.

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியம், இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தை அறிந்து கொள்ளம் துணைசெய்கிறது. பழக்கம் என்ற சொல்லில் 'பழகு' எனும் வேர்ச்சொல் பழக்கம், பயிற்சி, வழக்கம், ஒழுக்கம் என்ற பொருள்களில் கையாளப்படுகிறது. பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் தமிழரால் சந்திக்கப்பட்டும், சிந்திக்கப்பட்டும் வந்துள்ளது. வருகின்ற இந்தப் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளுமே இங்கு ஆய்வுப் பொருட்களாக அமைகின்றன. பல மனித குழுக்களிடமும் இவ்வாய்வு நிகழும் போது அவற்றை ஒப்பிட்டு ஆராயும் போது தனிப்பட்ட சிறப்புகள், உணர்வுகள் வெளிப்படவும் அங்கே வாய்ப்புண்டு. இந்நிலையில் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டு நிலை, நாகரிக வளர்ச்சி, அவை தொடர்பாக அமையும் செயற்பாடுகள், காலம், இடம், சூழலுக்கு ஏற்ப மாறுபடுதல், புதியன தோன்றல் போன்ற அனைத்தும் வெளிவர வாய்ப்புண்டு என்ற நிலையில் இங்குத் தமிழரின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ஆய்வு செய்யப்படுகின்றன.

**Abstract**

Sangam literature serves as an important source for understanding the Tamil society that existed in Tamil Nadu more than two thousand years ago. The Tamil word “practice” is derived from the root word “To become accustomed” and is used to denote the meanings of habit, practice, custom, and conduct. The customs, practices, and beliefs followed and contemplated by the Tamil people have evolved over time. These customs, practices, and belief systems constitute the subject of the present study. When such practices are studied across different human communities and comparatively analysed, it becomes possible to identify their distinctive characteristics, values, and emotional dimensions. In this context, the present study examines the customs, practices, and beliefs of the Tamil people, with the aim of bringing to light the cultural conditions of Tamil society, its development of civilisation, related social practices, variations according to time, place, and circumstances, and the emergence of new practices.

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

**குறிப்புச் சொற்கள்**

பழக்கவழக்கம், நம்பிக்கை, பயிற்சிவிதி, சிலம்புகழி நோன்பு, வடக்கிருத்தல், உண்ணா நோன்பு, கைம்மை நோன்பு, நீராடல் நோன்பு, காமன் நோன்பு, அருந்ததி நோன்பு, சதுர்த்தி விரதம், ஏக பத்தினி விரதம், மகட்பேறு வேண்டி நோன்பு.

**முன்னுரை**

தமக்கென ஒரு விழுமிய வரலாறும், வாழ்க்கை நெறியும் படைத்த தமிழினம், பழமையும் சிறப்பும் கொண்டு துலங்குவதாகம். நாட்டின் வரலாற்றினை எழுதுவதற்கு இலக்கியம் பெரிதும் துணை செய்யும். அம்முறையில் சங்க இலக்கியம், இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தை அறிந்து கொள்ளம் துணைசெய்கிறது. பழக்கம் என்ற சொல்லில் 'பழகு' எனும் வேர்ச்சொல் பழக்கம், பயிற்சி, வழக்கம், ஒழுக்கம் என்ற பொருள்களில் கையாளப்படுகிறது. உளவியலார் பழக்கத்தைப் 'பயிற்சிவிதி' என்று சுட்டுவர். பழக்க வளர்ச்சி விதி எனவும் கூறுவர்.

பழக்கம் தனி மனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைக் குறிப்பதாகும் என்பதும் உண்டு. பழக்கம் என்பது தனிமனிதனைச் சார்ந்த தொடக்கநிலை. வழக்கம் என்பது சமுதாயம் சார்ந்த தொடர்நிலை. சமூகத்தில் அதிகமாகப் பின்பற்றப்படும் பழக்கமான நடவடிக்கையை வழக்கமாகும்.

'நம்பு மேவு நகையாகும்மே' (திருவள்ளுவமாலை.12)

நம்பிக்கையே உள உருவாக்கம் என்பர். நம்பிக்கை பொதுவாகச் செவி வழிப் பரவுவது. நம்பிக்கைகளை அறிவியல் முறையில் சோதனைக்கு உட்படுத்துதல் கடினமானது. பெரும்பாலான நடவடிக்கைகளுக்குக் காரணம் காட்ட முடியாது. பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் தமிழரால் சந்திக்கப்பட்டும், சிந்திக்கப்பட்டும் வந்துள்ளது. வருகின்ற இந்தப் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளுமே இங்கு ஆய்வுப் பொருட்களாக அமைகின்றன. பல மனித குழுக்களிடமும் இவ்வாய்வு நிகழும் போது அவற்றை ஒப்பிட்டு ஆராயும் போது தனிப்பட்ட சிறப்புகள், உணர்வுகள் வெளிப்படவும் அங்கே வாய்ப்புண்டு. இந்நிலையில் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டு நிலை, நாகரிக வளர்ச்சி, அவை தொடர்பாக அமையும் செயற்பாடுகள், காலம், இடம், சூழலுக்கு ஏற்ப மாறுபடுதல், புதியன தோன்றல் போன்ற அனைத்தும் வெளிவர வாய்ப்புண்டு என்ற நிலையில் இங்குத் தமிழரின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. இவற்றின் மூலம் மானுடவியல் உளவியல், சமூகவியல் துறை சார்ந்தவர்க்கும் சில சிந்தனைகளைத் தர இயலும்.

**நம்பிக்கை சார்ந்த பழக்கவழக்கங்கள்**

நம்பிக்கை மனிதன் தானே உருவாக்கிக் கொண்டது. நம்பிக்கை நாளடைவில் தனிமனிதப பயிற்சி என்ற நிலையிலிருந்து, வளர்ச்சி அடைந்து சமுதாய நம்பிக்கையாக உருப்பெறுகின்றது. நோன்பு பற்றிய இவ்வாய்வை முப்பிரிவாக அமைக்கலாம்.

பழந்தமிழரிடம் காணப்பட்டவை

1. சிலம்புகழி நோன்பு
2. வடக்கிருத்தல்
3. உண்ணா நோன்பு

காப்பியங்களில் மரபாக அமைவன

1. கைம்மை நோன்பு
2. நீராடல் நோன்பு

காப்பியங்களில் புதியன

1. காமன் நோன்பு
2. அருந்ததி நோன்பு

3. சதுர்த்தி விரதம்

4. ஏக பத்தினி விரதம்

5. மகட்பேறு வேண்டி நோன்பு

சிலம்புகழி நோன்பு

பண்டைத் தமிழர் வழக்கிலிடம் பெற்று இன்று முழுமையாக வழக்கொழிந்த நிலையில் இலக்கியம் வழியாகத் தெரியவரும் நோன்பு சிலம்புகழி நோன்பு. சிலம்பு மகளிர் அணியும் ஒரு வகை காலணி. மணவினையின் போது மணமகளின் காலினின்றும் சிலம்பினை நீக்குதல் மரபு. இச்செய்தியினை அகநானூற்றில் பிரிவை உரிப்பொருளாகக் கொண்ட பாலைத்திணைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. மேலும் சிலம்பு பருவ மகளிரின் அணியாகத் திருமணத்திற்குப் பின்னும் அவர்கள் அணிந்திருந்தமையினை இலக்கியம் காட்டுகின்றது. காப்பியங்களில் சிலம்புகழி போன்ற செயல்முறை பற்றிய குறிப்பு இடம் பெறவில்லை.

'உற்றநோய் நோற்றல் உயிர்க்குறுகண் செய்யாமை

அற்றே தவத்திற் குரு'(குறள்.261)

என தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், தம் பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாமை ஆகியவற்றைத் தவத்தின் இரண்டு கூறுகளாகச் சுட்டுவதால் நோன்பின் தன்மை உணரமுடிகிறது. பெருங்கதையில் வாசவதத்தை மணவினையின் போது காலில் சிலம்ப அணிந்திருந்த செய்தி இடம் பெறுகிறது. இன்று சிலம்பு கழி நோன்பு முழுமையாக வழக்கொழிந்துவிட்டது.

வடக்கிருத்தல்

தமிழரின் நம்பிக்கை சார்ந்த பழக்க வழக்கங்களில் இதனை ஆடவர் மேற்கொண்டனர். ஊருக்கு வடபால் ஓரிடத்தில் வடக்குத் திசை நோக்கி அமர்ந்த வண்ணம் உண்ணாநோன்பிருந்து உயிர்த்துறப்பதை வடக்கிருத்தல் எனக் கொண்டனர். பழந்தமிழரிடம் காணப்பட்ட உண்ணாநோன்பு மேலும் காப்பியங்களில் மரபாக அமைவன.

1. கைம்மை நோன்பு

2. நீராடல் நோன்பு

பழந்தமிழர் பலநிலையில் உண்ணா நோன்பை மேற்கொண்டனர். வஞ்சினம் கூறியபொழுது உண்ணா நோன்பை மேற்கொண்ட நிலையைப் பதிற்றுப்பத்து பாடலில்,

'மாண்புனையிஞ்சி மதில் கடந்தல்லது

உண்கிது மல்லேம் புகாவெனக் கூறிக்

கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்'(பதிற்றுப்பத்து.**70)**

முனிவர், தவம் செய்வோர், நோன்பியர் ஆகியோர் உண்ணாநோன்பை மேற்கொண்டனர். சமணப் பெண் துறவியாகிய கவுந்தியடிகள் உண்ணா நோன்பிருந்து உயிர்விட்டமை சிலப்பதிகாரத்தில் சுட்டப்பட்டுள்ளது.

'தவத்திரு சிற்ப்பிற் கவுந்தி சீற்ற
நிவந் தோங்கு செங்கோனீணில வேந்தன்
போகுயிர் தாங்கப் பொறை சாலாட்டி
என்னோ டிவர் வினை புகுத்ததோ குவன
உண்ணா நோன்போடுயர் பதப் பெயர்த்தலும்'

**(**சிலப்.வஞ்சி.நீர்ப்படைக்காதை.**79-83)**

**புனலாடல்**

தை நீராடலைச் சிறுமியர் கன்னியர் மகளிர் சடங்கு அறிந்த முதுப்பார்பினியர் நோற்கும் முறை காட்டப்படுகின்றது. பனியுடை புலர்தற்கண் ஆடி, ஈர ஆடையை உலர்த்திக் காய வைப்பர். தாயுடன் நீராடுதலால் 'அம்பா ஆடல்' என்று கூறப்படுகிறது. இந்நோன்பு தொடங்கப்படும் நாள் குறித்துப் பல

மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. இந்நோன்பு மார்கழி மாதம் திருவாதிரை நாளில் தொடங்கியது என்றும் கூறுவர்.

'மார்கழி முழுமதி நாளில் தொடங்கித் தைத் திங்கள்

முடிக்கும் ஒரு நோன்பு'

'பனிப்படுபைதல் விடுதலைப் பருவத்து' (பரிபாடல்-**11.75)**

என்பதால் மார்கழி மாதம் என்பார் நச்சினார்க்கினியர். மார்கழி மாதம் முழுவதும் நோன்பிருந்து, நீராடினாலும், தையில் நீராடுவதோடு நோன்பு முற்றுப் பெறுவதால் இதற்கு தைநீராடல் எனப் பெயர் வந்தது என்பது பொருத்தமாக அமைகிறது. மார்கழி மாதம் முழுமையும் நீராடி நோன்பிருந்து தை மாதம் முதல் நாள் நீராடி, நோன்பு முடிவடைதல் நடைபெறுவதால் மை மாதத்தின் பெயரை நீராடலுக்கு உரியது ஆக்கி தைநீராடல் எனப் பெயர் வந்தது என்பது பொருத்தமான அமைகிறது என்பர். (தை – தையலார்) பெண்கள் மேற்கொள்ளும் நோன்பு என்பதாலும் தைநீராடல் எனச் சுட்டியிருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. அந்தன மகளிரும் விரும்பிப் புனலாட்டிற்றுச் சென்றனர். மகளிர் தாம் விரும்பிய நன்மணம் நிறைவேறுதற் பொருட்டு, கூடி நீராடியக் காட்சி,

'அருண்கடி மூதூர்ப் பெருங்குடி மகளிரொ
டென்ன லாகத்துப் பெண்ணுல கேய்ப்பக்
கன்னி மகளிர் கதிர்த்த கோலமொடு
நன்மணி யைம்பா நங்கையொடு போந்தோர்'

எனச் சுட்டப்படுவதைக் காணலாம். நன்மணம் வேண்டியும், வளம் வேண்டியும் மேற்கொண்ட புனலாடல் இன்றும் வழக்கில் இடம்பெறுகிறது. புது நீர் வருகையை வரவேற்குமுகத்தான் ஆடி மாதம் பதினெட்டாம் நாளன்று கன்னியர் மணம் நிகழ வேண்டி நோன்பு நோற்றல் உண்டு. காவிரி நீர் வருகையின் போது மாலையில் கன்னியர் கூடி தீபம் ஏற்றி அதனை இலையில் மதிக்கவிட்டு மாவிளக்கிட்டு ஆற்று நீரை வழிபடுதல் இன்றும் வழக்கில் இடம்பெறுவதைக் காணலாம். 'பதினெட்டாம் பேர்' என்றும் இந்நோன்பைச் சுட்டுவர்.

காமன் நோன்பு

பழந்தமிழர் காமனுக்கு விழா எடுத்த செய்தியை கலித்தொகை பரிபாடல் ஆகியவற்றில் காணலாம். இளவேனில் காலத்தில் விழாவெடுத்த செய்தியை கலித்தொகை,

'இருங்குயிலாலப் பெருந்துறை கவின்பெறக்

குழவி வேனில் விழவெதிர் கொள்ளுஞ்

சீரார் செவ்வியும் வந்தன்று'

எனச் சுட்டுகின்றது. காமன் என்னும் கடவுள் மாயோனின் மகன் என்றும் வேதகாலக் கடவுள் என்றும் கருதப்படுகின்றான். மன்மதன், வேனிலான், வில்லவன், காமவேள், உருவிலான், கரும்பு வில்லேந்தியவன், மகரவேலன், கொடி மைந்தன் எனப் பல பெயரால் அழைக்கப்பட்ட காமனுக்கு, கன்னியர் நோற்ற நோன்பையும் அது விழாவில் இடம் பெற்ற நிலையையும் காப்பியங்களின் வாயிலாக அறியமுடிகின்றது.

ஏகபத்தினி விரதம்

ஏக-ஒரு முகமாக, ஒன்றுக்கு மேற்படாது, பத்தினி – மனைவி, விரதம், ஒழுக்கம், உடல், உள்ள ஒருமித்த கற்பு விரதம், ஏகபத்தினி விரதம் எனலாம். இவ்விரதம் பற்றிய குறிப்பினை முதன்முதலாக கம்பராமாயணத்தில் காணமுடிகிறது.

'வந்து எனைக் கைப்பற்றிய வைகல்வாய்

இந்த இப்பிறவிக்கு இருமாதரைச்

சிந்தையாலும் தொடேன், என்ற செல்வரம்

தந்து வார்த்தை திருச்செவி சாற்றுவாய்'(சுந்தரகாண்டம்.சூடாமணி.**34)**
எனச் சீதை அனுமனிடம் தன் கணவனுக்குச் சொல்லியனுப்பிய செய்தியாக இது இடம்பெறுகிறது.
தொகுப்புரை

- தனிமனித நம்பிக்கை நாளடைவில் சமூக நம்பிக்கையாக உருமாற்றம் அடைகிறது.
- சிலம்புகழி நோன்பு, வடக்கிருத்தல் போன்ற பண்டைத் தமிழரிடம் வழக்கிலிருந்த சில பழக்கவழக்கங்கள் தற்போது வழக்கொழிந்துவிட்டன.
- காமன் நோன்பு அருந்ததி நோன்பு ஏகபத்தினி விரதம் போன்றவை காப்பியங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன.
- தை நீராடலை முதுப்பார்பினியர் நோற்கும் முறை காட்டப்படுகிறது.
- தமிழரின் நம்பிக்கை சார்ந்த பழக்கவழக்கங்களில் ஆடவர் வடக்கிருத்தல் சுட்டப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1.] வித்யா ரத்னா, டாக்டர்.மு.சந்தானராமன், திருவள்ளுவமாலை(விளக்கவுரை), பூங்கொடி பதிப்பகம், சென்னை-2007.

[2.] முல்லை பி.எல்.முத்தையா(உ.ஆ), திருக்குறள், முல்லை பதிப்பகம், சென்னை-2003.

[3.] ஔவை சு.துரைச்சாமிப்பிள்ளை(உ.ஆ), பதிற்றுப்பத்து, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1950.

[4.] ஆர்.கே.சண்முகம் செட்டியார்(உ.ஆ), சிலப்பதிகாரம், புதுமலர் நிலையம், கோயம்புத்தூர்-1872.

[5.] புலியூர்க்கேசிகன்(உ.ஆ), பரிபாடல், சாரதா பதிப்பகம், சென்னை-2009.

[6.] மா.இராசமாணிக்கனார்(உ.ஆ), கலித்தொகை, பூம்புகார் பதிப்பகம், சென்னை-2011.

**எழுத்தாளர் பிரகடனம் - முரண்பாடுகள் அறிக்கை (Author Declaration - Conflict of Interest Statement)**

இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளடக்கத்திலோ, தரவுப் பகுப்பாய்விலோ அல்லது அதன் முடிவுகளிலோ எந்தவிதமான நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட முரண்பாடுகளும் (No Conflict of Interest) இல்லை என்று இதன் முதன்மை எழுத்தாளர் உறுதிபடப் பிரகடனம் செய்கிறார். இக்கட்டுரை முற்றிலும் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டு ஆராய்ச்சிக்காக மட்டுமே நடுநிலைமையோடு எழுதப்பட்டுள்ளது.